# அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்

தலைமைக் கழகம்

எண் : 15, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை - 600 014

தொலைப்பேசி : 044 - 2848 1235


"தமிழகம் தலைநிமிரட்டும், தமிழர் வாழ்வு மலரட்டும்"

தேதி : 24.02.2024

## தலைமைக் கழக செய்தி வெளியீடு

**"தமிழக மக்களின் மகிழ்ச்சி தான் எனது லட்சியம்; தமிழக மக்களின் வளர்ச்சியும், வளமான வாழ்வும் தான் நான் காண விரும்பும் இலக்குகள்"** எனக்கூறி, தமிழக மக்களின் வளர்ச்சியையே லட்சியமாக கொண்டு இந்தியாவுக்கே முன்மாதிரியான சமூக நலத்திட்டங்களை செயல்படுத்தி **"மக்களால் நான்; மக்களுக்காகவே நான்" என தன் இறுதி மூச்சு வரை மக்களுக்காக வாழ்ந்து மறைந்த இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் பிறந்தநாள் இன்று கடைபிடிக்கப்படுகிறது.**

இதையொட்டி, கழக பொதுச்செயலாளர் **திரு.டிடிவி தினகரன் அவர்கள்**, மதுரை, ஹோட்டல் ஹெரிட்டேஜ் வளாகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த **இதயதெய்வம் அம்மா அவர்களின்** திருவுருவப் படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.




இதன் தொடர்ச்சியாக, **கழக பொதுச்செயலாளர் திரு.டிடிவி தினகரன் அவர்களின் சார்பில்,** சென்னை ராயப்பேட்டை, தலைமைக் கழக அலுவலகத்தில் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த **இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** திருவுருவப் படத்திற்கு, கழக துணை பொதுச்செயலாளரும், தென்சென்னை தெற்கு மாவட்ட கழக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான **திரு.G.செந்தமிழன்,** கழக அமைப்பு செயலாளரும், மத்திய சென்னை மேற்கு மாவட்ட கழக செயலாளருமான **திரு.V.சுகுமார்பாபு,** கழக மீனவர் அணி செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான **திரு.T.ஆறுமுகம்,** கழக அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி செயலாளர் **திரு.குட்வில் குமார்,** மத்திய சென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.L.ராஜேந்திரன்,** வடசென்னை கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.C.P.ராமஜெயம்,** வடசென்னை மத்திய மாவட்டக் கழக செயலாளர் **திரு.A.R.பழனி,** மத்திய சென்னை மேற்கு மாவட்டக் கழக செயலாளர் **திரு.P.ஆனந்தன்**, மத்திய சென்னை மத்திய மாவட்டக் கழக செயலாளர் **திரு. ஹாஜி K.முகமது சித்திக்,** கழக புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர்.மன்ற இணைச்செயலாளர் **திரு.K.S.கோணேஸ்வரன்,** கழக மகளிர் அணி இணைச்செயலாளர் **செல்வி.R.சந்தியா,** கழக சிறுபான்மையினர் நலப்பிரிவு இணைச்செயலாளர் **திரு.S.M.ஜோமணிபென்,** கழக வழக்கறிஞர் பிரிவு இணைச்செயலாளர் **திரு.P.ராஜ்குமார் பாண்டியன்**, கழக இதயதெய்வம் அம்மா தொழிற்சங்க பேரவை துணைச்செயலாளர் **திரு.P.சிவசங்கரன்,** கழக அமைப்பு சாரா ஓட்டுநர்கள் அணி பொருளாளர் **திரு.பி.ஆர்.சாமி (எ) P.முனுசாமி** மற்றும் கழக நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.





மேலும், கழக அமைப்பு ரீதியாக செயல்படும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள கழக நிர்வாகிகள் **இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின்** திருவுருவப்படத்திற்கு **மாலை அணிவித்தும், மலர்தூவியும் மரியாதை செலுத்தினார்கள்.**

இந்நிகழ்ச்சிகளில் மாவட்ட, பகுதி, ஒன்றியம், நகரம், பேரூர் மற்றும் ஊராட்சி, வட்ட / வார்டு, கிளைக் கழக நிர்வாகிகளும், அனைத்து சார்பு அணிகளின் நிர்வாகிகள் மற்றும் கழக தொண்டர்கள் என திரளானோர் கலந்து கொண்டனர்.

**தலைமைக் கழகம்**
**அம்மா மக்கள் முன்னேற்றக் கழகம்**